01.02.2024

O.S.No. 254/2009

பி.வா.சா.1 .திரு.சிங்கார வேலன் த.பெ.சேதுராமலிங்கம்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1. நான் பி.ஏ. பட்டதாரி. தாவா சொத்தை பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்து கோபாலகிருஷ்ணகோன் டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்துக்கள் சர்வே எண்.16/3 சி1 பி, சர்வே எண்.16/3 சி2, சர்வே எண்.17/12, சர்வே எண்.17/11, சர்வே எண்.17/13, சர்வே எண்.17/10 ஆகியவற்றில் அடங்கியவை என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் சர்வே எண்.158/1 ல் அடங்கிய சொத்துதான் தாவா சொத்து என்று எனக்கு தெரியும். தாவா சொத்துக்கள் சர்வே எண்.158/1 ல் அடங்கியவை என்று நான் கூறுவதற்கு ஆதரவாக எந்த வருவாய் ஆவணங்களை பார்வையிட்டேன் என்றால் வருவாய் ஆவணங்கள் எதையும் நான் பார்வையிடவில்லை, நீதிமன்ற உத்தரவு மற்றும் காளிஸ்வரன் பத்திரம் ஆகியவற்றின் சர்வே எண்ணை பார்த்து நான் தெரிந்து கொண்டேன். தாவா சொத்துக்களுக்கு பிரதிவாதிகளால் இந்த வழக்கில் ரீசர்வே எண்கள் என்னென்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண்.158 மற்றும் சர்வே எண்.158/1 என்பது எந்த காலகட்டங்களில் உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் 1986 ம் ஆண்டுக்கு பின்பு உட்பிரிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். நான் 1986 க்கு பின்னிட்டு என்று கூறுவது யுடிஆர் திட்டத்தில் சப்டிவிசன் செய்யப்பட்டுள்ளது என்று நான் கூறுகிறேன் என்றால் சரிதான்.

2. தாவா சொத்துக்கள் கோபாலகிருஷ்ணகோன் டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று எனக்கு எப்போது தெரியும் என்றால் 2001-2002 ஆம் ஆண்டு காலகட்டங்களில் தெரியும். நான் 11 முதல் 13 பிரதிவாதிகளின் ஆவணங்களை பார்த்து தாவா சொத்திற்கு சர்வே எண்.158/1 என்று தெரிந்து கொண்டேன் என்று நான் கூறியுள்ளதால் என்னென்ன ஆவணங்களை அவ்வாறு நான் பார்த்து தெரிந்து கொண்டேன் என்றால் 12 ம் பிரதிவாதி தாவா சொத்தில் கிரையம் பெறும் போது அவரது கிரைய ஆவணத்தை நான் பதிவு செய்யும் போது உடனிருந்து பார்த்துள்ளேன், அதே போல் நீதிமன்ற உத்தரவிலும் தாவா சொத்து சர்வே எண்.158/1 என குறிப்பிட்டுள்ளதை பார்த்துள்ளேன். நான் பார்த்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல்தான் பி.வா.சா.ஆ-1 என்றால் சரிதான். பி.வா.சா.ஆ-1 கிரைய ஆவணத்தில் அந்த சொத்து கோபாலகிருஷ்ணகோன் டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றோ, அதன் டிரஸ்டி கிரையம் பதிந்து கொடுத்தார் என்றோ எதுவும் காணப்படவில்லை என்றால் சரிதான், ஆனால் அந்த கிரைய ஆவணத்திற்கு முன்பு எழுதிக்கொடுத்த பவர் பத்திரத்தில் அவ்வாறு காணப்படுகிறது.

3. அந்த பவர் பத்திரம் எழுதும் போது நான் உடன் இருக்கவில்லை, ஆனால் அந்த பவர் பத்திரத்தை நான் பார்த்துள்ளேன். அந்த பவர் பத்திரம் தான் பி.வா.சா.ஆ-2 என்றால் சரிதான். அந்த பவர் பத்திரத்திலும், அந்த சொத்து கோபாலகிருஷ்ணகோன் டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்து

என்றோ, அதன் டிரஸ்டி கிரையம் பதிந்து கொடுத்தார் என்றோ எதுவும் காணப்படவில்லை என்றால் சரிதான். வாதி தரப்பு பிராதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனக்கு ஆலம்பட்டியில் விவசாய நிலங்கள் உள்ளன. அந்த நிலத்தில் நான்தான் அனுபவத்தில் உள்ளேன். அதன் சர்வே எண்.600/1, 600/2 ஆகும். அந்த சொத்திற்கான பட்டா, சிட்டா, அடங்கல் அனைத்தும் எனது பெயரில் தான் உள்ளன என்றால் சரிதான். மேற்படி சொத்திற்கு நான் உரிமையாளர் என்பதாலும், நான் அனுபவத்தில் இருப்பதாலும் அதற்கான பட்டா, சிட்டா அனைத்தும் எனது பெயரில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் பொறுத்து பட்டாக்கள், அடங்கல், கிஸ்திரசிதுகள் அனைத்தும் வாதிகள் பெயரில் உள்ளது என்பதும், அவை இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதும் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது, ஆனால் காளீஸ்வரன், ராஜா, சண்டிவீரணன் ஆகியோர்கள் பெயரில் பட்டா இருந்ததை நான் பார்த்துள்ளேன். அந்த பட்டாவை நகல் எடுத்து என்னிடம் காண்பித்தார்கள்.

4. 11 முதல் 13 பிரதிவாதிகள் சொத்துக்கள் சர்வே எண்.17/1 ஏ 1 ஏ-ல் அடங்கியுள்ளதாக பி.வா.சா.ஆ-7 பட்டாவில் காணப்படுகிறது என்றால் சரிதான், ஆனால் அது கூட்டுப்பட்டா. நான் சர்வே எண்.17/1 ஏ 1 ஏ-க்கு சம்பந்தபட்ட சொத்திற்கு சாட்சி சொல்ல வந்துள்ளேனா என்றால் எனக்கு தெரிந்தவரை தாவா சொத்துக்களுக்கு சர்வே எண்.158/1 மட்டும்தான். சர்வே எண்.158 மற்றும் சர்வே எண்.158/1 ஏ-ல் எத்தனை உட்பிரிவுகள் உள்ளன என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள சர்வே எண்.158/1 என்பது நடைமுறையிலேயே இல்லை என்றால் அதை பற்றி எனக்கு சரியாக தெரியவில்லை. 11 முதல் 13 பிரதிவாதிகள் இஎம்ஜி கோபாலகிருஷ்ணகோன் டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்தைகிரையம் பெறவில்லை என்றும், அந்த டிரஸ்டின் டிரஸ்டி என்ற கோதாவில் கிரையம் எதுவும் பதிந்து கொடுக்கவில்லை என்பதுவும், அந்த பி.வா.சா.ஆ-1 ஆவணத்தினால் 11 முதல் 13 பிரதிவாதிகளுக்கு பி.வா.சா.ஆ-1 ல் கண்ட சொத்தை பொறுத்து எந்தவித உரிமையும் சித்திக்கவில்லை என்பது தெரிந்தும், உண்மைக்கு புறம்பாக நான் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

5. தாவா சொத்துக்களை பொறுத்து 1983 ம் ஆண்டே வாதிகள் கிரையம் பெற்று, தொடர்ந்து அனுபவத்தில் இருந்து அனைத்து வருவாய் ஆவணங்களும் வாதிகள் பெயரில் தான் இருக்கின்றது என்பதனை நான் தெரிந்து கொண்டு, உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. 1 முதல் 4 வாதிகளின் தகப்பனாரான பிச்சைராமன், ராஜேந்திரன் ஆகியோர்கள் தாவாசொத்துக்களில் அத்துமீறி பிரவேசிக்க முயற்சித்தார்கள் என்று நான் கூறியிருப்பதும், அருண்போத்தி என்ற சின்னபோத்தி என்பவரிடம் அது பற்றி நான் தகவல் சொன்னதாக சொல்லி இருப்பதும், இந்த வழக்கிற்காக நான் கூறும் பொய்யான சங்கதி என்றால் சரியல்ல. 11 முதல் 13 பிரதிவாதிகள் தாவாசொத்தை என்னிடம் ஒப்படைத்து பாதுகாக்க சொன்னதாக சொல்லி இருப்பது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. 11 முதல் 13 பிரதிவாதிகள் தாவாசொத்தில் வேலி அமைத்ததாக நான் சொல்லி இருப்பது உண்மைக்கு புறம்பான சங்கதி என்றால் சரியல்ல. எனது

நிருபண வாக்குமூலத்தில் சொல்லி உள்ள கார்த்திகேயன் என்பவர் 11, 12, 13 பிரதிவாதிகளின் கையாள் என்றால் சரியல்ல, இந்த வழக்கில் 10ம் பிரதிவாதியான சுப்பிரமணி என்பவரது மகன்தான் கார்த்திகேயன் ஆவார்.

6. எனது நிருபண வாக்குமூலத்தில் எந்த தேதியில், எந்த ஆண்டு நான் கூறுவது போல் சம்பவம் நடைபெற்றது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் வாதிகளுக்கு ஆதரவாக இந்த நீதிமன்றம் I.A.No.701/2009 -ல் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி இந்த வழக்கு முடியும் வரை அது உறுதி செய்யப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மேற்சொன்ன உத்தரவு எனக்கும் தெரியும், 11 முதல் 13 பிரதிவாதிகளுக்கும் தெரியும் என்றாலும் எனது பிரமாண வாக்குமூலத்தில் சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்படும் தேதி, மாதம் குறிப்பிட்டால் மேற்கூரிய இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தவை மீறியதாக ஆகிவிடும் என்பதால் நான் தேதி, மாதம் எதுவும் குறிப்பிடாமல் உண்மைக்கு புறம்பான சம்பவங்களை சொல்லி நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதிகளை காவல்துறையினர் விசாணைக்கு அழைத்து எச்சரித்து அனுப்பியதாக நான் சொல்லி இருப்பது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. 11 முதல் 13 பிரதிவாதிகளுடன் ஏற்பட்ட எனது நட்பினால் அவர்களுக்கு ஆதரவாக அவர்கள் தயாரித்து கொடுத்த நிருபண வாக்குமூலத்தை தாக்கல் செய்து சுயலாபம் கருதி இந்த வழக்கில் உண்மைக்கு மாறான சம்பவங்களை சாட்சியமாக அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.